



# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

## மானியக் கோரிக்கை எண். 18

## அறிவிப்புகள்
## 2023-2024

# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

மானியக் கோரிக்கை எண்.18

அறிவிப்புகள்
2023-2024


**ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அமைச்சர்

# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

**1) சென்னை எஸ்பிளனேடு பகுதியில் 44640 சதுர அடி நிலப்பரப்பில் அமைந்துள்ள குறளக கட்டடத்தினை இடித்து விட்டு, நவீன வசதிகளுடன், போதுமான வாகன நிறுத்துமிட வசதிகளுடன் புதிய கட்டடம் ரூ.100 கோடி செலவில் கட்டப்படும்.**

1968 முதல் 1970 வரையில் கட்டி முடிக்கப்பட்ட தற்போதைய குறளக கட்டடங்கள், நவீன வசதிகள் ஏதுமின்றி, போதுமான வாகன நிறுத்துமிட வசதியில்லாமல் மிகவும் பழையதாக உள்ளன. தற்போது இவ்விரு கட்டடங்களும் பயன்பாட்டு முதிர்வின் காரணமாக மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

எனவே, இக்கட்டடங்களை இடித்து, தேவையான தளபரப்பளவு குறியீட்டின்படியும், அதிகபட்ச பொருளாதார மதிப்பை அடையும் வகையிலும் தோராயமாக ரூ.100 கோடி செலவில் புதிய கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இக்கட்டடம், அனைத்து நவீன வசதிகளுடன், போதுமான வாகன நிறுத்துமிடத்தையும் கொண்டதாக இருக்கும். இந்த கட்டடத்தின் வடிவம் மற்றும் முகப்பு, அதிகளவில் மக்களை கவரும் வண்ணம், இந்த பகுதிக்கே சிறப்பு சேர்க்கும் எழில் மிகு கட்டடமாக அமையும்.

**2) 8720 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள திருச்சிராப்பள்ளி உதவி இயக்குநர் மற்றும் மண்டல துணை இயக்குநர் அலுவலகக் கட்டடத்தை இடித்து, புதிய கட்டடம் ரூ.5.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தற்போது திருச்சிராப்பள்ளி இரயில்வே சந்திப்புக்கு எதிரில், கதர் வாரியத்தின் உதவி இயக்குநர் மற்றும் மண்டல துணை இயக்குநர் அலுவலகங்கள் இயங்கி வருகிறது. இவ்விடம், வர்த்தக செயல்பாட்டு மையமாகவும் சிறந்த வியாபாரம் நிறைந்த பொருளாதார மதிப்பு கொண்ட இடமாகவும் உள்ளது. மேலும், இந்தக் கட்டடம் 1966-ல் கட்டப்பட்டு மிகவும் முதிர்வு பெற்று நவீன வசதிகளின்றி பழுதடைந்த நிலையில் உள்ளது.

எனவே, இக்கட்டடத்தை இடித்து, இந்த இடத்தின் பொருளாதார மதிப்பை மேம்படுத்தும் வகையில் முழுமையான தளப்பரப்பளவு குறியீட்டின்படி, அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய ஒரு எழில்மிகு வர்த்தகக் கட்டடம் ரூ.5.60 கோடி மதிப்பில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இப்புதிய கட்டடம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதோடு கிராமப்புற நிறுவனங்களின் தொழில் முனைவோருக்கு நல்ல சந்தை வாய்ப்பை வழங்குவதாகவும் இருக்கும்.

**3) கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் பகுதியில் கொள்முதல் செய்யப்படும் பச்சைத் தேனின் விலையை கிலோ ஒன்றுக்கு ரூ.140/- லிருந்து ரூ.155/- ஆக உயர்த்தி வழங்கப்படும்.**

கதர் வாரியமும், மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவு சங்கமும் கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம் மற்றும் அதைச் சுற்றியுள்ள தேனீ விவசாயிகளிடமிருந்து பச்சைத் தேனை கொள்முதல் செய்து வருகிறது. தற்போதைய பச்சைத்தேன் கொள்முதல் விலையான கிலோ ஒன்றுக்கு ரூ.140/- என்பது 2020-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டதாகும்.

தேனீ விவசாயிகள் மற்றும் மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களிடமிருந்து தேன் விலையை உயர்த்துவது தொடர்பான கோரிக்கைகள் தொடர்ந்து பெறப்படுவதால், பச்சைத் தேன் கொள்முதல் விலையினை கிலோ ஒன்றுக்கு ரூ.140/-லிருந்து ரூ.155/-ஆக 01.04.2023 முதல் உயர்த்தி வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம் சுமார் 10,000 தேனீ விவசாயிகள் பயனடைவர்.

**4) நீலகிரி மாவட்ட தேன் விவசாயிகளிடமிருந்து மலைத் தேனை கொள்முதல் செய்து, பகுப்பாய்வு செய்து, பாட்டில்களில் நிரப்பிட ஏதுவாக திருப்பூர் கதர் வளாகத்தில் ரூ.15 இலட்சம் செலவில் புதிய தேன் பதப்படுத்தும் நிலையம் ஒன்று நிறுவப்படும்.**

மார்த்தாண்டம் பகுதியில் உள்ள இரப்பர் மரங்களிலிருந்து கிடைக்கும் பச்சைத் தேனை கொள்முதல் செய்து, பதப்படுத்தி, இருப்பு வைத்து, ஆண்டு முழுவதும் தமிழ்நாட்டிலுள்ள கதரங்காடிகள் மூலம் "காதி தேன்" எனும் பெயரில் விற்பனை செய்யப்படுகிறது.

சமீப காலமாக, வாடிக்கையாளர்கள் இதர வகை தேனை வாங்குவதற்கு விருப்பம் தெரிவிப்பதால், நீலகிரி மலைப் பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களால் சேகரிக்கப்படும் மலைத் தேனை கொள்முதல் செய்து, பதப்படுத்தி, பகுப்பாய்வு மேற்கொண்டு, கண்ணாடி பாட்டில்களில் நிரப்பி "**காதி மலைத் தேன்**" என பெயரிட்டு விற்பனை செய்யும் பொருட்டு, திருப்பூர் கதர் வளாகத்தில் புதிய தேன் பதப்படுத்தும் நிலையம் ரூ.15 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

**5) நீலகிரி மாவட்டம் கோக்கால், திருச்சிக்கடி, கீழ்கோத்தகிரி, புதுக்கோத்தகிரி மற்றும் கொல்லிமலை ஆகிய பகுதிகளில் மண்பாண்டங்களை செய்யும் கோத்தாஸ் பழங்குடி மக்களின் உற்பத்தி திறனை அதிகரித்திட, இலவசமாக 100 நவீன மின்விசை சக்கரங்கள் ரூ.25 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

நீலகிரி மாவட்டம் கோக்கால், திருச்சிக்கடி, கீழ்கோத்தகிரி, புதுக்கோத்தகிரி, கொல்லிமலை ஆகிய பகுதிகளில் உள்ள கோத்தாஸ் பழங்குடியினர் கையால் இயங்கும் சக்கரங்களை பயன்படுத்தி மண்பாண்டங்களை தயாரிக்கின்றனர். இதனில் மனித உழைப்பைக் குறைக்கவும், மண்பாண்டங்களின் உற்பத்தித் தரம் மற்றும் அளவை அதிகரிக்கவும், தலா ரூ.25,000/- மதிப்புள்ள 100 நவீன மின்விசை சக்கரங்கள் இலவசமாக வழங்கப்படும்.

**6) நீலகிரி மாவட்டம் கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய பகுதிகளிலுள்ள மண்பாண்டங்களை செய்யும் கோத்தாஸ் பழங்குடி மக்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் 600 சதுர அடி மற்றும் 300 சதுர அடி அளவுகளில் இரண்டு மண்பாண்டத் தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படும்.**

நீலகிரி மாவட்டம் கோக்கால், திருச்சிக்கடி பகுதியில் உள்ள கோத்தாஸ் பழங்குடியினருக்கு, மூலப்பொருட்களை சேமிக்கவும், மண்பாண்டங்களை உற்பத்தி செய்யவும், உலர்த்தவும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பாதுகாக்கவும், போதுமான வசதிகள் இல்லாததால், கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய இடங்களில் முறையே 600 சதுர அடி மற்றும் 300 சதுர அடி அளவுகளில் ரூ.25 இலட்சம் செலவில் இரண்டு மண்பாண்டத் தொழிற்கூடங்கள் கட்டித் தரப்படும்.

**7) நீலகிரி மாவட்டம் கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய பகுதிகளிலுள்ள மண்பாண்டங்களை செய்யும் கோத்தாஸ் இனமக்களுக்கு ரூ.3 இலட்சம் செலவில் 4 மண் அரைக்கும் இயந்திரங்கள் வழங்கப்படும்.**

நீலகிரி மாவட்டம் கோக்கால் மற்றும் திருச்சிக்கடி ஆகிய பகுதிகளில் உள்ள கோத்தாஸ் பழங்குடியினர் இரண்டு வகையான களிமண்ணை கால்களால் மிதித்து மண்பாண்டங்களை உற்பத்தி செய்து வருகின்றனர். அவர்களின் உழைப்பை எளிதாக்கவும், உற்பத்தி திறனை அதிகரிக்கவும், மொத்தம் ரூ.3 இலட்சம் செலவில் 4 மண் அரைக்கும் இயந்திரங்கள் இலவசமாக அந்தக் கிராம மக்களுக்கு வழங்கப்படும்.

**8) செங்கோட்டை மண்பாண்ட தொழில் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் 600 சதுர அடி அளவில் புதிய தொழிற் கூடம் கட்டித் தரப்படும்.**

தென்காசி மாவட்டம் செங்கோட்டையில் IND-327 செங்கோட்டை மண்பாண்ட தொழிற் கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர்களால் உற்பத்தி செய்யப்படும் மண் பானைகள், பூந்தொட்டிகள் மற்றும் இதர அலங்கார மண்பாண்டப் பொருட்களை, மழைக்காலத்தில் பாதுகாக்க ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில், 600 சதுர அடி பரப்பளவில் ஒரு தொழிற் கூடம் கட்டித் தரப்படும்.

## 9) வாடிக்கையாளர்களைக் கவரும் வண்ணம் மூன்று கதரங்காடிகள் ரூ.23 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

"**கதர் அங்காடிகள் கதர் வாரியத்தின் முகம்**" என்பதால், வாடிக்கையாளர்களை அதிகளவில் கவரவும் அதன் மூலம் கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டும், கதர் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவது அவசியமாகும். அதன்படி, கோவை பிரதானம், கோவை - ஆர்.எஸ்.புரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள 3 கதரங்காடிகள் ரூ.23 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்படும்.

## 10) பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள 40 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் புதிய தறிகள் வழங்கப்படும்.

பட்டு நெசவில், பட்டுத் தறிகள் முக்கிய பங்கு வகிக்கிறது. பொருளாதார ரீதியில் பின் தங்கி இருக்கும் பட்டு நெசவாளர்களுக்கு உதவிடும் நோக்கிலும், பட்டு நெசவுத் தொழிலை காத்திடும் வகையிலும் சேலம், கோயம்புத்தூர், திண்டுக்கல் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களிலுள்ள 40 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.10 இலட்சம் செலவில் 40 புதிய தறிகள் வழங்கப்படும்.

## 11) பட்டு நெசவுப் பணி மேற்கொள்ளும் 100 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.8 இலட்சம் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்படும்.

பாரம்பரியமிக்க நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும், தரமான பட்டுப் புடவைகளை நெசவு செய்திடும் பொருட்டு, சேலம் மற்றும் கும்பகோணம் பகுதியிலுள்ள 100 பட்டு நெசவாளர்களுக்கு ரூ.8 இலட்சம் செலவில் அச்சுப் பண்ணை, விழுதுகள், ஜக்கார்டு பெட்டிகள், நாடா உள்ளிட்ட அத்தியாவசிய தறி உபகரணங்கள் வழங்கப்படும்.

## 12) கதர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 100 நெசவாளர்களுக்கு ரூ.7 இலட்சம் செலவில் தறி உபகரணங்கள் வழங்கப்படும்.

கதர் மற்றும் பாலியஸ்டர் துணி நெசவுப் பணியில் உற்பத்தி திறனை அதிகரித்திடவும், தரமான கதர் இரகங்களை நெசவு செய்திடவும் திருப்பூர், திருச்சி மற்றும் மதுரை மண்டலத்திலுள்ள 100 கதர் நெசவாளர்களுக்கு ரூ.7 இலட்சம் செலவில் அச்சுப் பண்ணை, விழுதுகள், நாடா உள்ளிட்ட அத்தியாவசிய தறி உபகரணங்கள் வழங்கப்படும்.

## 13) சிவகங்கை மாவட்டம் கண்டனூர் சோப்பு அலகில் தானியங்கி சோப்பு தயாரிக்கும் இயந்திரம் ஒன்று ரூ.15 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

தற்பொழுது சிவகங்கை மாவட்டம் கண்டனூர் சோப்பு அலகில், பகுதிப் பணிகள் இயந்திரங்களை கொண்டும், பகுதிப் பணிகள் கையாலும் மேற்கொள்ளப்படுகிறது. ஆதலால், அச்சோப்புகளின் வடிவம் மற்றும் அளவு ஒரே சீராக இருப்பதில்லை. எனவே, நேர்த்தியான வடிவத்துடன் அதிகளவில் சோப்புகளை உற்பத்தி செய்திட ஏதுவாக ரூ.15 இலட்சம் செலவில் சிறிய தானியங்கி சோப்பு தயாரிக்கும் இயந்திரம் ஒன்று நிறுவப்படும்.

**14) சிறந்த கதர் நூற்பாளர், சிறந்த கதர் நெசவாளர் மற்றும் சிறந்த பட்டு நெசவாளர் ஆகியோருக்கு தற்போது வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகை ரூ.10,000/-லிருந்து ரூ.25,000/- என உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் நூல் சிட்டங்களை உருவாக்குதல், கதர் துணிகள் மற்றும் பட்டுப் புடவைகளை நெசவு செய்தல் போன்ற பணிகளில் 1617 நபர்கள் ஈடுபட்டுள்ளனர். இவ்வகை கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் ஒரு சிறந்த கதர் நூற்பாளர், ஒரு சிறந்த கதர் நெசவாளர் மற்றும் ஒரு சிறந்த பட்டு நெசவாளருக்கு தலா ரூ.10,000/- வீதம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. இந்த பரிசு தொகை, 2023-2024-ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.25,000/- என உயர்த்தி வழங்கப்படும்.

# தமிழ்நாடு பனை பொருள் வளர்ச்சி வாரியம்

## 15) இராமநாதபுரம் - தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள பகுதியில் பனை பொருள் வர்த்தக மையம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

பொது மக்களிடையே, மருத்துவக் குணம் நிறைந்த பனை வெல்லம் சார்ந்த பொருட்களும் கலைநயமிக்கப் பனை ஓலைப் பொருட்களும் பிரபலமாகி வருகின்றன. எனினும், உண்மைத் தன்மையுள்ள பனை வெல்லம் சார்ந்த பொருட்களை பொது மக்களுக்குக் கிடைக்கச் செய்வது பெரும் சவாலாக உள்ளது. மேலும், பனைப் பொருட்களை சந்தைப்படுத்த ஒருங்கிணைந்த சந்தை ஏதும் இல்லை.

எனவே, சுத்தமான, உண்மைத் தன்மையுள்ள அனைத்து பனைப் பொருட்களையும் ஒரே இடத்தில் வைத்து, மக்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இராமநாதபுரம் - தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள நரிப்பையூர் பகுதியில் ரூ.5 கோடி செலவில் ஒரு பனை பொருட்கள் வர்த்தக மையம் அமைக்கப்படவுள்ளது. இம்மையம், சாலையோர வணிக வளாகம் போன்று, பனைப் பொருள் விற்பனை கூடம், உணவகம், பரிசுப் பொருட்கள் அங்காடி, சிறுவர் விளையாட்டு பூங்கா போன்றவற்றுடன் இரண்டு / நான்கு சக்கர வாகனங்கள் மற்றும் பேருந்து நிறுத்தும் வசதிகளை கொண்டதாக இருக்கும்.

## 16) தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணம் பகுதியில் பனைவெல்லக் கிடங்கு மற்றும் பனை ஓலைத் தொழிற் கூடம் ரூ.35 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டிணத்தில் மாநில இணையத்திற்கு சொந்தமான இடத்தில் நவீன முறையில் பனை வெல்லம் தயாரிக்கும் ''பொது சேவை மையம்'' அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பனை வெல்லத்தை, சரியான வெப்பநிலையில், நீண்ட நாட்களுக்கு பாதுகாப்பாக இருப்பு வைத்திட பிரத்யேகக் கிடங்கும் (25’ x 20’) பனை ஓலைப் பொருட்களை உற்பத்தி செய்யவும், அதனை இருப்பு வைத்திட ஒரு தொழிற் கூடமும் (30’x 20’) ரூ.35 இலட்சம் செலவில் நிறுவப்படும்.

## 17) கடலூர் நகரத்தில் 4 விற்பனை அங்காடிகள் ரூ.30 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

பனைப் பொருட்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளித்து, கதர் கிராமப் பொருட்களை விற்பனை செய்யும் வகையில், தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் கடலூர் கிளை வளாகத்தில் 4 விற்பனை அங்காடிகள் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்த அங்காடிகள், சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்து செல்லும் ஒரு முக்கிய இடத்தில் அமைக்கப்பட உள்ளதால், கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களை மக்களிடையே பிரபலப்படுத்தி அதிகளவில் விற்பனை செய்ய இயலும்.

## 18) இராமநாதபுரம் மாவட்டம் சாயல்குடியில் உள்ள தொழிற்கூடத்திற்குத் தேவைப்படும் உபகரணங்கள் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

பனை வெல்லம் மற்றும் அதனை சார்ந்த பொருட்கள் உடல் நலனுக்கு நன்மை பயக்கும் என்பதால், அப்பொருட்கள், பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

எனவே, இராமநாதபுரம் - சிவகங்கை மாவட்ட பனைவெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் கீழ் செயல்படும் சாயல்குடி தொழிற்கூடத்தில் பனை சார்ந்த மதிப்பு கூட்டுப் பொருட்களான பனங்கேக், பனைவெல்ல அல்வா, ரொட்டி வகைகள், பனங்கற்கண்டு மிட்டாய் மற்றும் பனங்கிழங்கு மாவு போன்றவைகளை தயாரிப்பதற்குத் தேவைப்படும் உபகரணங்கள், பாத்திரங்கள், அரவை இயந்திரம், பேக்கிங் மெஷின், அச்சுகள் மற்றும் உலை அடுப்பு ஆகியவை ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து நிறுவப்படும்.

## 19) மதுரை-விருதுநகர்-திண்டுக்கல் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்திற்கு குளிர்சாதன வசதிகளைக் கொண்ட 10 தள்ளு வண்டிகள் மற்றும் 5 குளிர்பதனப் பெட்டிகள் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்யப்படும்.

மதுரை - விருதுநகர் - திண்டுக்கல் மாவட்ட பனை வெல்ல கூட்டுறவு சம்மேளனத்தின் மூலமாக தேனி, மதுரை நகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பதநீர் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இம்மாவட்ட சம்மேளனத்தில், பதநீரை அதிகளவில் சேமிக்கவும், கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் விற்பனைக்கு எடுத்து செல்லவும், போதிய வசதிகள் இல்லாததால், பதநீரை பனைத் தொழிலாளர்களிடமிருந்து அதிகளவில் கொள்முதல் செய்து விற்பனை செய்வதில் சிரமம் உள்ளது. இச்சிரமங்களை போக்கிடும் வகையில், 5 குளிர்பதனப் பெட்டிகள் மற்றும் பதநீரை விற்பனைக்கு கொண்டு செல்வதற்கான குளிர்சாதன வசதிகளைக் கொண்ட 10 தள்ளு வண்டிகள், ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் கொள்முதல் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

## 20) தமிழ்நாடு மாநில இணையத்தின் மானாமதுரை கிளை வளாகத்தில் விற்பனை அங்காடி ரூ.5 இலட்சம் செலவில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு மாநில பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனை கூட்டுறவு இணையத்தின் மானாமதுரை கிளை வளாகம், மானாமதுரை நகரின் முக்கிய வணிகப் பகுதியில் அமைந்துள்ளது.

எனவே, இந்த இடத்தின் பொருளாதார மதிப்பை மேம்படுத்தும் நோக்கிலும், கதர் கிராமப் பொருட்கள் மற்றும் பனைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கச் செய்யும் பொருட்டும், மானாமதுரை கிளை வளாகத்தில் ஒரு விற்பனை அங்காடி ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும்.

**ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன்**
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
அமைச்சர்

அச்சிட்டோர்: அரசு மைய அச்சகம், சென்னை-600 001

அச்சிட்டோர்: அரசு மைய அச்சகம், சென்னை-600 001